# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **291/2015**

ஆணை எண். **77/2016**

நாள் : **20/04/2016**

முறையீட்டுதாரரின்
பெயர் மற்றும் முகவரி அற்ற மனு

**– முறையீட்டு மனுதாரர்**

மாநகர சுகாதார அலுவலர்,
சென்னை மாநகராட்சி,
சென்னை – **600 003.**

**– எதிர் மனுதாரர்**

**முறையீட்டுதாரரின் பெயர் மற்றும் முகவரி அற்ற முறையீட்டு மனுவொன்று அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமாக இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. முகவரியில்லாதிருப்பினும் பொதுமக்கள் நலன் உள்ளடக்கியதாக இருப்பதை கருத்தில் கொண்டு மனு அனுமதிக்கப்பட்டு 291/ 2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.**

## ஆணை

முறையீட்டுதாரரின் பெயர் மற்றும் முகவரி அற்ற மனுவொன்று சென்னை மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிடப்பட்டு அரசுத் துறை மூலமாக இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. மேற்படி மனுவில் சென்னை மாநகராட்சிகுட்பட்ட மருத்துவமணைகளில் தரமற்று பேறுகால மருத்துவ கருவிகள் மற்றும் உபகரணங்கள் மத்தியப் பிரதேச மாநில நிறுவனம் ஒன்றிடமிருந்து பெறப்படுவதாக புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மனு பொதுமக்கள் நலன் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டு இப்புகார் மனு சம்பந்தமாக சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலரின் அறிக்கை பெறப்பட்டதுடன் அவரிடம் நேரடி விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது.

மருத்துவப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள் ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்யக் கூடிய வல்லுனர் குழுவில், மகப்பேறு மருத்துவத்தில் மூத்த அறுவை சிகிச்சை வல்லுனர்கள் இருப்பதால், அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே பொருள்கள் தேர்வு செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்படுகின்றன என விசாரணையின் பொழுது தெரிவித்தார்.

2. இந்தூர் நகரைச் சேர்ந்த M/s Innovative Linen Co.(P) Ltd. என்ற நிறுவனத்திடமிருந்து திறந்தவெளி ஒப்பந்த அடிப்படையில் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டன என்றும், 2013 ஆம் ஆண்டில் மேற்படி நிறுவனம் உட்பட 7 நிறுவனங்கள் திறந்தவெளி ஒப்பந்த புள்ளியில் கலந்து கொண்டன எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 24.07.2015 அன்று திறக்கப்பட்ட ஒப்பந்த புள்ளியில் ஒரே ஒரு நிறுவனம் மட்டும் தகுதி பெற்றிருந்த காரணத்தால் ஆய்வுக்குழுவின் பரிந்துரையின் படி ஒப்பந்தபுள்ளி முழுவதுமாக இரத்து செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவப் பொருட்கள் அனைத்தும் தமிழ்நாடு மருத்துவ சேவை மையத்திடமே கொள்முதல் செய்யப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையீட்டுதாரரின் முகவரி மற்றும் பெயர் இல்லாததால் மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ள இயலவில்லை எனவே இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்.

பெறுநர்

துணைச் செயலாளர்,
ந.நி (ம) கு. வ. துறை,
சென்னை – 600 009.
(கடித எண்.22054/தேர்தல்/2015–1,
நாள் 19.10.2015 சம்பந்தமாக)

மாநகராட்சி சுகாதார அலுவலர்,
சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 003.